முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

இ.ம. எண். 26/2018

நிறைவேற்று மனு எண் 27/2017

எ.ம.சா.1 – செந்தில்குமார்

01–04–2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

நான் ஏற்கனவே முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து உள்ளேன். தற்போது கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

12.01.2024 – திருப்பூர் தெற்கு வார்டு சி, பிளாக் 32 ஆண்டிக்காடு வீதி சர்வே எண் 18 க்குரிய டி.எஸ்.எல்ஆர் கணினி நகல் **எ.ம.சா.ஆ.1** ஆகும்.
20.11.2011 – திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 342/2011 தாவா வழக்குரை சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.2** ஆகும்.
22.12.2011 – திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 342/2011 தாவா எதிர்வழக்குரை சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.3** ஆகும்.
24.02.2018, 19.03.2019, 14.11.2019, 16.03.2023, 30.03.2024, 14.11.2019, 09.08.2021, 26.05.2022, 30.03.2024 – வீட்டு வரி மற்றும் தண்ணீர் வரி ரசீதுகள் 10 எண்ணிக்கை **எ.ம.சா.ஆ.4** ஆகும்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.ஏ., படித்துள்ளேன். எ.ம.சா.ஆ.1 பட்டா பற்றி தெரியுமா என்றால் தெரியும். எ.ம.சா.ஆ.2 வழக்கு விவரங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் கோரி யாரால் யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஜின்னா என்பவர் எங்கள் சொத்தில் வாடகைக்கு இருந்தார். அவர் வழக்கு தாக்கல் செய்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி உள்ளார். தாவா சொத்தில் இருந்து சட்டத்திற்கு புறம்பாக காலி செய்யக்கூடாது என தாக்கல் செய்துள்ளார்.

2) எ.,ம.சா.ஆ.3 ன்படி தாவா சொத்துக்கு வாடகைக்கு விடுவதற்கு ரூ.1 லட்சம் முன்தொகை பெற்றுக் கொண்டதாக என் அப்பா தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். முதல் விசாரணையில் ரூபாய் 1 லட்சம் பெறவில்லை என தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரூ.1 லட்சம் முன்

தொகை பெற்றது உண்மை. மனுச் சொத்திற்கு தண்ணீர் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். தவறாக சாட்சியமளிக்கிறேன் மனுச் சொத்தின் மாநகராட்சி தண்ணீர் இணைப்பே இல்லை. வேறு சொத்துக்குரியதை தாக்கல் செய்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) மனுச் சொத்தை சுற்றி உள்ள சொத்துகள் எங்களுடையதல்ல. வழக்கை திசை திருப்ப வேண்டி எ.ம.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுச் சொத்துக்கு அருகில் வசிப்பவர் மனுச் சொத்தின் உரிமை கோரி டி.ஆர்.ஓ. நீதிமன்றம் வரை சென்றால் சரியல்ல. அது வேறு சொத்து. மனுச் சொத்து விவரமும் பூமியில் வேறுபடுகிறது என்றால் சரியல்ல. மனுச் சொத்துக்கு மனுதாரர் தான் உரிமையாளர் என்பதற்கு என் அப்பா எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) மனுச் சொத்துக்கு என் அப்பாவோ நானோ உரிமையாளர் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா தாக்கல் செய்துள்ளேன். மனுச் சொத்துக்கும் என் அப்பாவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருந்தபோது தமிழ் ஆசிரியராக பணியாற்றி வந்தார் என்றால் சரிதான்.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.04.01 15:56:14 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.